**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No**.212/2018 திரு.முருகேஷ்பாண்டியன் வா.சா. 1

**வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1-ம் பிரதிவாதி கௌதம் கல்லூரியில் படிப்பதற்காக Egucation loan வாங்கியிருந்தார் என்றால் சரிதான். அதற்கு அவரது அப்பா ஜாமீன் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். கல்விகடன் எந்த அடிப்படையில் கொடுக்கிறோம் என்றால், கைடுலென்ஸ் எங்கள் வங்கியில் உண்டு, நீதிமன்றத்தில் அதை ஆஜார் படுத்தியுள்ளோமா என்றால், இல்லை. கல்விக்கடன் எந்த அடிப்படையில் கொடுக்கவேண்டும் என்று எங்களுக்கு தலைமை அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்ட சுற்றறிக்கையை வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. கல்விகடனை எந்த தருணத்தில் திருப்பி வாங்குதல் வேண்டும் குறித்த சுற்றிக்கையினையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பின் மூலமாக 1-ம் பிரதிவாதி அதில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 66-ன் கீழ் ஒப்படைக்கும்படி 23.02.2022-ல் கேட்டுள்ளார் என்றால், எனக்கு தெரியாது. தற்பொழுது அந்த அறிவிப்பில் உள்ள ஆவணங்களை ஆஜார் படுத்த இயலுமா என்றால், கேட்டால் தாக்கல் செய்கிறோம். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சில ஆவணங்கள் பிரதிவாதி எங்கள் வங்கியில் கேட்டுஇருக்கிறார்கள் என்றால் அந்த சட்டம் எங்களுக்கு பொருந்தாது என்றும் அதனால் கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறோம். அதனால் பிரதிவாதிகள் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 66-ன் கீழ் கேட்டுஇருக்கிறார் என்றால், தலைமை அலுவலகத்தில் அப்ரூவல் வாங்கிதான் கொடுக்க முடியும்.

**பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒ/ம். திரு.முருகேஷ்பாண்டியன் PW1 (ஒ/ம். N. Sharmila)

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.